

வேற்றுகிரகவாசிகளா,
தேவதூதர்களா, அல்லது
தத்தெடுத்துகொள்ளப்பட்டவர்களா:

# யார் தேவனுடைய குமாரர்கள்?

டக் பேச்சுலர்

Copyright © 2011, 2021
by Amazing Facts

All rights reserved.
Printed in India.

Published by:
**Amazing Facts India**
Post Box No 51
Banjara Hills, Hyderabad
Telangana, 500034

www.AmazingFactsIndia.org

வேற்றுகிரகவாசிகளா,
தேவதூதர்களா அல்லது
தத்தெடுத்துகொள்ளப்பட்டவர்களா:

# யார் தேவனுடைய பிள்ளைகள்?

டக் பேச்சுலர்


**தேவதூதர்கள் ஆவிகளாயிருக்கிறார்கள்** . . . . . **9**

**அண்ட வாழ்க்கை?** . . . . . . . . . . . . . . . . . **11**

**கிரகங்களின் அதிபதிகள்** . . . . . . . . . . . . . . **13**

**நீதியின் புத்திரர்கள்** . . . . . . . . . . . . . . . **16**

**மனுஷகுமாரத்திகள்** . . . . . . . . . . . . . . . **19**

**கலப்புத் திருமணங்கள்** . . . . . . . . . . . . . **23**

**பலதார மணம்** . . . . . . . . . . . . . . . . . . **29**

**ஒரு இராட்சத பிரச்சனை** . . . . . . . . . . . . **33**

**தத்தெடுப்பின் தெரிவுகள்** . . . . . . . . . . . . **36**


அக்டோபர் 30, 1938, அது ஹாலோவீன் (Halloween)- னின் முந்தின இரவில் நிறைய அமெரிக்கர்கள் தங்களுடைய வானொலிகளை கொலம்பியா ஒளிபரப்பு

அலைக்கு திருப்பி கொண்டிருந்தனர், அப்பொழுதுதான் வானிலை அறிக்கையை வாசித்து முடித்து இசை இசைக்க ஆரம்பித்தனர். சில நொடிகளில், ஒளிபரப்பு ஒரு மார்ஸ் கிரகத்தில் நடைபெற்ற வினோதமான வெடிப்புகள்பற்றி ஒரு விசேஷ செய்தியால் தடைபட்டது. இன்னமும் அதிகமான தகவல் வரும்போது அதிகமான அறிவிப்புகள் கொடுக்கப்படும் என்று அறிவிப்பாளர் கவனிப்போருக்கு உறுதியளித்தார். பிறகு இசை தொடர்ந்தது.

இப்பொழுது ஒரு ஊடுருவலின் அச்சமூட்டும் அறிக்கையினால் இரவு செல்லசெல்ல இசை அடிக்கடி தடைபட்டது. மார்ஸ் கிரகத்திலிருந்து வேற்றுகிரகவாசிகள் நியூஜெர்சியில் (New Jersey) மற்றும் உலகத்தின் மற்ற நகரங்களிலும் வந்திரங்கியிருந்தார்கள். பூமி முழு அளவு தாக்குதலிலிருந்தது. ஒளிபரப்பை கேட்டுக்கொண்டிருந்த அநேகர் பீதி அடைந்தனர் மற்றும் சிலர் தங்கள் வீடுகளையும் விட்டுவிட்டு மலைகளுக்கு ஓடினர்.

ஆனால் அதெல்லாம் கட்டுக்கதையாயிருந்தது.

ஹெச். ஜி. வெல்ஸ் (H.G.Wells) என்பவரின் உலகங்களின் யுத்தம் என்கிற புத்தகத்தை தழுவி ஒரு வாலிப ஆர்சன் வெல்ஸ் (Orson Wells) என்பவர் உண்மையில் நடப்பதுபோல அந்த கதையை மாற்றவும் செய்து ஒளிபரப்ப

செய்தார். கேட்ட அவர்களில் அனேகர் கட்டுக்கதையை உண்மை என்று நம்பினர்.

பீதி அடைந்தவர்கள் முழுமையற்ற தகவலுடன் செயல்பட்டனர். அந்த ஒளிபரப்பின் ஆரம்பத்திலும் முடிவிலும் இதெல்லாம் ஒரு நாடகம்தான் என்று ஒளிபரப்பு நிலையம் அறிவித்ததை கேட்கத்தவறினர். இடையில் வந்துவிட்டு, கதையின் ஒரு பகுதியை கேட்டுவிட்டு, சூழலை அறியாமல் வானமே இடிந்து விழுகிறது எனநினைத்து ஓடினர்.

அதுபோலவே, ஆதியாகமம் புத்தகத்தில் ஒரு பகுதி இருக்கிறது, அதனுடைய சூழலை பார்க்காமல் படிக்கப்படும்போது விண்வெளியில் இருந்து வந்த கிரகவாசிகள் பூமியில் ஊடுருவியிருக்கிறார்கள் என்று அநேகர் நம்புவதற்கு காரணமாய் இருக்கிறது. இந்த புதிரான வசனத்தை ஒருமுறை நாம் பார்ப்போம்:

> “மனுஷர் பூமியின்மேல் பெருகத் துவக்கி அவர்களுக்கு குமாரத்திகள் பிறந்தபோது; தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்”. (ஆதியாகமம் 6:1,2).

ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரைக்கும், வேதாகமம் முழுவதும் அது ஒரு சொற்றொடராக காணப்படுகிறது:

“தேவகுமாரர்’’. அதனால் அது உண்மையில் என்ன கூறுகிறது என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியம் என்று நான் நினைக்கிறேன், நீங்கள் நினைக்கவில்லையா?

சிலர் “தேவகுமாரர்’’ என்கின்ற பதம் வேற்றுகிரக ஊடுருவல் காரர்களை குறிக்கிறது என்று நம்புகின்றனர். இந்த உயிரினங்கள் பெண்ணின மனிதர்களை தங்கள் மனைவிகளாக ஏற்றுக்கொண்டு சில குறிப்பிடக்கூடிய சந்ததிகளை பெற்றெடுத்து விழுந்துபோன தேவதூதர்கள் அல்லது விண்வெளியிலிருந்து வந்த தீமையான வேற்றுக்கிரகவாசிகளாயிருக்கிறார்கள் என்று அவர்கள் நம்புகின்றனர். இந்த சேர்க்கையினால் வம்சாவழி மூலமாக ‘இராட்சதர்’’ (வசனம் 4) வந்தது ஏன் என்பதற்கான ஒரே விளக்கத்தை இந்த நம்பிக்கைக்கு அவர்கள் பகுத்தறிவுட்டுகிறார்கள். இந்த பரிசுத்தமற்ற சேர்க்கைகள் இறுதியில் ஜலப்பிரளயத்துக்கு வழிவகுத்து மனிதனின் கூடுதலான துன்மார்க்கத்திற்கு காரணமாய் இருந்தன என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

“அவர்களுடைய சில குமாரத்திகள் மிக அழகாக இருந்தார்கள் அதனால் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஜீவன்கள் கீழே இறங்கிவந்து அவர்களுக்கு தேவைப்பட்டவர்களை மணந்து கொண்டார்கள்’’ என்று சில வேதாகம மொழிபெயர்ப்புகள் சொல்லுகின்றன. எப்படியும்,

இந்த மொழிபெயர்ப்பு அசல் எபிரேய மொழியோடு சரியாக ஒத்துப்போகவில்லை. மேலும் கிறிஸ்துவின் காலகட்டத்தின் நேரத்தில் நிறைய உறுதியாக்கப்படாத புத்தகங்கள் வலம் வந்தன; இந்த புத்தகங்களில் சிலவும் இப்படிப்பட்ட வினோதமான விளக்கங்களை பெற்றிருந்தன.

உதாரணத்துக்கு, ஏனோக்கின் புத்தகம்பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அது வேதாகமத்தில் இல்லை, ஆனால் அது சுருக்கமாக யூதாவின் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. யூதாவை எழுதியவர் உண்மையில் ஏனோக்கு புத்தகத்தில் இருந்து சில வரிகளை மேற்கோள் காட்டுகிறார், இது கிறிஸ்துவின் காலகட்டத்திலிருந்த பிரசித்திப்பெற்ற உறுதியாக்கப்படாத புத்தகம். (அது உண்மையிலே ஏனோக்கினால் எழுதப்பட்டதல்ல.) நவீன கால 'மோட்சப்பிரயாணம்' போல அது ஒரு கட்டுக்கதைகளின் புத்தகமாய் இருந்தது.

ஏனோக்கின் புத்தகத்திலிருந்து ஒரு சிறு இலையை யூதா எடுத்துள்ளார், ஆனால் இது ஏனோக்கின் புத்தகத்தில் இருக்கும் எல்லாவற்றின் உண்மைத்தன்மைக்கு ஒரு ஒப்புதலாக, பார்க்கப்படக்கூடாது. அதுபோலவே, ஜான் பனியனின் உருவக கதைகளில் இருந்து ஒரு சிறுபகுதியை பகிர்ந்து கொண்டு அதிலிருந்து ஒன்றையோ அல்லது இரண்டையோ மேற்கோள் காட்டி ஒரு ஆவி

நிறைந்த பிரசங்கத்தை ஒருவர் செய்யலாம். அதனால் அந்த கதைகள் உண்மையானவைகள் என அர்த்தம் கொள்ளமுடியாது.

எந்த கிறிஸ்தவ மார்க்கத்தின் அதிகாரமும் கத்தோலிக்கர் அல்லது புராடெஸ்டான்ட்டுகள் - அவர்களுடைய விசுவாசத்தின் இறுதி கிறிஸ்தவ சட்டத்தில் ஏனோக்கின் புத்தகத்தை தெரிந்து கொள்ளவில்லை என்பதை நினைவுகூறுங்கள். அது சத்தியத்தைவிட புராணக்கதையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது மற்றும் அது வேதாகமம்போல நிச்சயமாகவே சமமான அளவு ஏவப்பட்டதல்ல.

இப்பொழுது அதனுடைய இடத்தை நீங்கள் புரிந்து கொண்டபிறகு, தேவபுத்திரர்பற்றி ஏனோக்கின் புத்தகம் என்ன சொல்லுகிறது என்பதை இங்கே கவனியுங்கள்:

> மனுஷபுத்திரர் அந்த நாட்களில் பெருகிய பிறகு, நேர்த்தியான அழகான குமாரத்திகள் அவர்களுக்கு பிறந்தார்கள், பரலோகத்தின் புத்திரரான தேவதூதர்கள் அவர்களை பார்த்தபொழுது, அவர்களை நேசிக்க ஆரம்பித்து ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள், வாருங்கள், நாம் போய் அறிவிற்சிறந்த மனித மனைவிகளை தெரிந்துக்கொண்டு நாம் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வோம். (7:1).

ஆரம்பகால சபை தலைவர்களில் சிலர் இந்த வரியை படித்துவிட்டு, இருமுறை கண் சிமிட்டினர் மற்றும் அது அப்படி உண்மையில் நடந்திருக்கக்கூடும் என கருதினர். அதன் விளைவாக தேவனுடைய மக்களில் சிலர் அவர்களுடைய நம்பிக்கைகளிலிருந்து இந்த கட்டுக்கதையை ஒருபோதும் முழுமையாக கைவிடவில்லை. எப்படியும், அதனை வேதமாக எடுத்துக்கொண்டால் அது ஒரு கற்பனையான விளக்கம் ஆகும். அது உண்மையில் மற்ற வேதாகம போதனைகளுடன் மிகப்பெரிய பிரச்சனைகளை உருவாக்குகிறது.

உண்மையில் இந்தப்பகுதியைப் புரிந்துகொள்வதற்கு வேறு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. நோவாவின் நாட்களில் பூமியை ஒரு ஜலப்பிரளயத்துக்கு வழிநடத்திய உலகத்தின் நிலைமைகளை பிரதிபலிக்கிறதாக ஆதியாகமம் 6-ரில், விசேஷமாக முதல் சில வசனங்களில் சில விஷ-யங்கள் நடந்திருக்கின்றன, மற்றும் இவைகள் நம்முடைய நாளில் மீண்டும் மீண்டும் நடைபெறுகின்றன. அதனால் வேதாகமம் இங்கு சொல்லுவது என்ன மற்றும் அது என்ன சொல்லவில்லை என்பதை நாம் புரிந்து கொள்வது நல்லது.

மேலோட்டமாக, “தேவகுமாரர்’’ என்பது விழுந்துபோன தேவதூதர்களை குறிக்கிறது என்று கூறுவது ஒரு புதிரான முடிவுக்கு

வருவதுபோல தோன்றுகிறது. ஆனால் நாம் பார்ப்பதுபோல, இந்தப் பகுதியின் சூழ்நிலைகளைபற்றி அறியாமல் இருந்தால், குறிப்பிட்ட கட்டுக்கதை உண்மைதானா என்றறிவதில் நீங்கள் உண்மையில் குழப்பப்படலாம்.

வேதவசனங்கள் சொல்வதில் ஏதேனும் குழப்பம் இருக்குமென்றால், அது பொதுவாக தகவலின் பற்றாக்குறையினால் மட்டுமே. பரலோகத்தில் விவாகம்பற்றி மார்க்க தலைவர்கள் குழப்பப்பட்டு இருந்தபோது இயேசு அவர்களிடம் சொன்னார், நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாததினாலல்லவா தப்பான எண்ணங் கொள்ளுகிறீர்கள்?'' (மாற்கு 12:24). வேறு வார்த்தைகளில், இயேசு இங்கே சொல்லுகிறார், "நான் சொல்லுவதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை ஏனென்றால் தேவனுடைய வார்த்தையை நீங்கள் அறியவில்லை.'' அதிர்ஷ்டவசமாக, இன்னமும் சில தகவல்களை வேதாகமத்திலிருந்து சேகரிப்பதின் மூலமும் வசனங்களை ஒன்றுக்கொன்று ஒப்பிட்டுப்பார்ப்பதன் மூலம் மிக எளிதாக தேவபுத்திரர் பற்றிய குழப்பத்தை நாம் தெளிவுபடுத்திக்கொள்ள முடியும்.

## தேவதூதர்கள் ஆவிகளாயிருக்கிறார்கள்

"தேவபுத்திரர்'' என்கின்ற பதத்தை ஆங்கில வேதாகமத்தின் கிங் ஜேம்ஸ் வேதாகமத்தில் 11 முறை இரண்டு முக்கியமான வழிகளில் பயன்படுத்துகிறது. எனினும், அது ஒருபோதும் தேவதூதர் என்று அந்த பதம் குறிக்கவில்லை.

"தம்முடைய தூதர்களை காற்றுகளாக... செய்கிறார்'' (சங்கீதம் 104:4).
தேவதூதர்கள் ஆவிகளாயிருக்கிறார்கள்,
அவர்கள் மாமிசமாயிருப்பதில்லை.
அவர்கள் எல்லாம் இப்பொழுது நம்மைசுற்றி இருக்கிறார்கள், ஆனால் அவர்களை நாம் பார்க்க முடியாது. அவர்கள் பொதுவாக அவர்களுடைய ஆவி வடிவத்தில் இருக்கிறார்கள் மற்றும் நம்முடைய உலகத்தில் வெகு சொற்ப உடல் ஒருங்கிணைப்பை பெற்று இருக்கிறார்கள் - அவர்கள் பள்ளிக்கூடம் போவதில்லை, வேலை பெறுவது இல்லை அல்லது குடும்பமாக வாழ்வது இல்லை. அவர்கள் இங்கே- "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியம் செய்கிறவர்களாயிருக்கிறார்கள்" (எபிரேயர் 1:14).

அவர்கள் விவாகம்பண்ணி குழந்தைகள் பெறவேண்டும் என விரும்பினாலும், அவர்களால் முடியாது; அவர்கள் மனுஷிக மரபணுக்களை (DNA) பெற்றிருக்கவில்லை. தேவதூதர்கள் மனிதர்களை விவாகம் செய்வது என்பதைகாட்டிலும் ஒரு இழுது

மீன், ஒரு மலை ஆட்டை விவாகம் செய்வது எளிது. இப்படி, தேவதூதர்கள் விழுந்து போனவர்களாயிருந்தாலும் சரி பரிசுத்தமானவர்களாயிருந்தாலும் சரி மனிதர்களை விவாகம் செய்வது குறித்து ஆதியாகமப்பகுதி எந்த நடைமுறை உணர்வுக்கும் ஒத்து வராது.

தூதர்கள் பிறப்பதில்லை; அவர்கள் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். தேவனுக்கு இன்னமும் அதிகமான தூதர்கள் தேவைப்பட்டு இருந்தால், அவர்களை மனிதர்களுக்கு அல்லது வேறு தூதர்களுக்கு பிள்ளைகள் பெற விவாகம் செய்ய வேண்டியதில்லை. ஒன்றுமில்லாமையில் இருந்து அவர்களை அவர் உருவாக்கமுடியும். லூசிபரைக் குறித்து பேசும்போது தேவன் சொன்னார், “நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உன் மேள வாத்தியங்களும் உன் நாகசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது” (எசேக்கியேல் 28:13).

மேலும், தேவதூதர்கள் மணம் முடிப்பதில்லை என்று இயேசு வெளிப்படையாக சொல்கிறார். விவாகம் என்பது ஒரு தனிப்பட்ட மனிஷீக முறைமை மனித குலத்திற்கு மட்டுமே குறிக்கப்பட்டிருக்கிறது. “உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை: அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப்போல் இருப்பார்கள்” (மத்தேயு 22:30). மாற்கும் லூக்காவும் அதையே பரிந்துரைக்கிறார்கள்:

“அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்கு பிள்ளைகளுமாயிருப்பார்கள்'' (லூக்கா 20:36; சில மொழிபெயர்ப்புகள் அதனை “தேவபுத்திரர்'' என்கிறது). ஏசு தேவதூ - தர்களுக்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கும் இடையே ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துவதை இங்கே கவனியுங்கள். அவர்கள் தனித்தனியாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள், இதன் பொருள் அவர்கள் வெவ்வேறாக இருக்கிறார்கள்.

ஆகையால், தேவபுத்திரர் தேவதூதர்கள் இல்லை என்றால், அவர்கள் யார் அல்லது என்னவாய் இருக்கிறார்கள்?

## அண்ட வாழ்க்கை?

நம்முடைய பத்தியில் தேவபுத்திரர் விண்வெளி ஊடுருவாலர்கள் அல்ல எனும்போது, வெளியில் இருக்கும் பிரபஞ்சத்தில் வேறு ஒரு ஜீவியம் இருக்கிறது என்று வேதாகமம் போதிப்பதுபோல தோன்றுகிறது. இயேசு வேறு கிரகங்களை உருவாக்கினார் என்று வேதாகமத்தில் தெளிவாக இருக்கிறது: “இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார்,

இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்'' (எபிரேயர் 1:2).

தொலைந்துபோன ஆட்டின் உவமையில், பூமி தொலைந்துபோன அந்த ஒரு ஆட்டை குறிக்கிறது, விலகிப்போய் அலைந்து திரியும் ஒரு உலகம், கிறிஸ்து ரட்சிக்க வந்த ஒரு உலகம். தேவன் அவருடைய முடிவில்லாத வாழ்வில் உடல் ரீதியான உயிரினங்களுடன் மற்ற உலகங்களைப் படைத்தார் என்று கற்பனை செய்வது சுலபம். உண்மையில், அவர் நம்முடைய உலகத்துக்கு முன்பாகவே சேராபீன் மற்றும் கேரூபீனையும் மற்றும் மற்ற தேவதூதர்களையும் பெற்றிருந்தார் என்பதை நாம் அறிகிறோம். குறைந்தபட்சம் இந்த வேற்றுகிரக உயிரினங்கள் இருந்தன என்று நாம் புரிந்து கொள்ளலாம். "ஏனென்றால், அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளும்…'' (கொலோசெயர் 1:16). "அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின்கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும்,... சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக் கேட்டேன்'' (வெளி 5:13).

எனினும், இந்த மற்ற சிருஷ்டிக்கப்பட்ட ஜீவிகள் இந்த உலகத்தை பார்க்க வருவதில்லை என்பதுபோல பெரும்பாலும் தெரிகிறது. பூமி அபாயகரமான பரவக்கூடிய பாவம் என்னும் வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று நீங்கள் சொல்லக்கூடும் மற்றும் நாம் தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறோம். தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் மருத்துவமனைகளுக்குள் செல்ல மருத்துவமனையில் வேலை செய்பவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள்; இந்த இடத்தில் தேவன் தான் தலைமை வைத்தியர் மற்றும் அவருடைய தூதர்கள் ஊழியம் செய்யும் ஆவிகள்.

## கிரகங்களின் அதிபதிகள்

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக, "இந்த உலகத்துக்கு அப்பால்" ஒரு புதிரான கூட்டம் பரலோகத்தில் நடைபெற்றது. "ஒருநாள் தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்து நின்றபோது, சாத்தானும் அவர்கள் நடுவிலே வந்து நின்றான்" (யோபு 1:6).

இந்தக் கூட்டத்தில் சாத்தானை போலவே தேவபுத்திரரும் பங்குபெற்றனர். சாத்தான், தான் பூமியில் இருந்து வந்ததாக சொல்லுகிறான். தேவனுடைய பிரபஞ்சத்தின் விழுந்து போகாத

உலகங்களில் இருந்து வந்தவர்களை தேவபுத்திரர் குறிக்கிறது. சாத்தான் பூமியின் பிரதிநிதியாக அங்கே வந்தான்.

நம்முடைய உலகத்தை சாத்தான் ஏன் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும்? ஆதியில், ஆதாம் பூமியின் ஆளுகையை பெற்றிருந்தான். அவன் அதைக் கீழ்ப்படுத்தி நிர்வகிக்க தேவனால் சிருஷ்டிக்கப்பட்டான். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் சொன்னார், “சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள்” (ஆதியாகமம் 1:28).

தேவனுக்கு கீழ்ப்படிபவனாக ஆதாம் இருந்தபோது, அவன் உலகத்தின் தலைமைத்துவத்தை பெற்றிருந்தான். ஆனால் ஆதாம் பாவம்செய்து சாத்தானுக்கு கீழ்ப்படிந்த உடனே அந்த ஆளுமை எதிரிக்கு மாற்றப்பட்டுவிட்டது. “மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?” (ரோமர் 6:16).

இயேசுவும்கூட சாத்தானை “இந்த உலகத்தின் அதிபதி” (யோவான் 12:31) என்று குறிப்பிடுகிறார். உண்மையில், மத்தேயு 4:8-10ல்

சாத்தான் பூமியின் ஆளுகையை இயேசுவிற்கு மாற்றித்தருவதாக சொன்னான் - இயேசு சாஷ்டாங்கமாய் விழுந்து சாத்தானைப் பணிந்துகொண்டால். அது அவனுடையதாய் இராதிருந்தால் பூமியின் ஆளுகையை கொடுப்பதற்கு சாத்தான் கூறியிருக்கமாட்டான் என்பது தெளிவாகிறது. அதனால் தேவன் உலக ஆளுநர்களை அல்லது தேவபுத்திரர்களை ஒரு கூட்டத்துக்கு அழைக்கும்போது, சாத்தான் பூமியின் பிரதிநிதியாக கலந்து கொள்கிறான்.

லூக்காவின் சுவிசேஷத்தில், இயேசுவின் வம்சவரலாறு பின்நோக்கி ஆதாம் வரைக்கும் நீளுகிறது. அந்த வம்ச வரலாறை பற்றி லுக்கா என்ன சொல்லுகிறார் என்பதை கவனியுங்கள்: “ஏனோஸ் சேத்தின் குமாரன்; சேத் ஆதாமின் குமாரன்; ஆதாம் தேவனால் உண்டானவன்” (லூக்கா 3:38).

சேத்துக்கும் ஆதாமுக்கும் இருக்கும் வித்தியாசம் என்னவென்றால், ஆதாம் தேவனுடைய கரத்தினால் சிருஷ்டிக்கப்பட்டவன்; சேத் ஏவாளுக்கு பிறந்தவன். ஆதாம் தேவனுடைய புத்திரனாக பூமியை ஆளுகை செய்ய சிருஷ்டிக்கப்பட்டான். இப்படியாக, அவர் படைத்த உலகங்களை ஆளுகை செய்ய தேவன் தாமே சிருஷ்டித்த ஜீவிகள் தாம் தேவபுத்திரர் என்பது அதன் வரையறைகளில் ஒன்று. இந்த ஜீவிகள் பிறக்கவில்லை ஆனால்

நேரடியாக தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட வகைகள்.

யோபு 38:7-ல் சொல்லுவாதாவது நம்முடைய உலகம் சிருஷ்டிக்கப்பட்டபோது, விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய் பாடி, தேவபுத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே'' என்று கூறுகிறது. "விடியற்காலத்து நட்சத்திரங்கள்'' தேவதூதர்களாக இருக்கிறார்கள், ஆனால் "தேவபுத்திரர்'' மற்ற உலகங்களின் தலைவர்களாக இருக்கிறார்கள். (வெளி 1:20ஐ பார்க்கவும்).

இது தெளிவானதால், "தேவபுத்திரர்'' என்கின்ற பதத்தின் இரண்டாம் விதத்தைப்பற்றி பார்ப்போம்.

## நீதியின் புத்திரர்கள்

தேவனுடைய ஆவியானவரால் புதுப்பிக்கப்பட்ட மனுஷஜீவிகளை தேவபுத்திரரின் அடுத்த பொருள் குறிப்பிடுகிறது.

மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்'' (ரோமர் 8:14). மத்தேயு 5:9 சேர்க்கிறது, "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்''. இங்கே இயேசு வெளிப்படையாக மனுஷஜீவிகளைக்

குறிக்கிறார், ஆனால் வெறும் மனிதஜீவிகள் அல்ல; இவர்கள் சமாதானம்பண்ணுகிறவர்கள், தேவனின் நீதியுள்ள பிள்ளைகள். எந்த வகையிலும் இது தேவதூதர்களையோ அல்லது வேற்றுகிரகவாசிகளையோ குறிக்கிறது என புரிந்து கொள்ளபடக்கூடாது.

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (யோவான் 1:12). தேவனுடைய புத்திரராக இல்லாதவர்களும் இருந்தார்கள், ஆனால் அவரை ஏற்றுக்கொள்வதின் மூலம் தேவனுடைய புத்திரராக மாறினார்கள். "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" (ரோமர் 8:14).

"தேவபுத்திரர்" என்பது ஆண்களை மட்டும் குறிக்கும் என்று கூற முடியாது என்பதை சொல்லப்படவேண்டும். அனேக வேதாகம மொழிபெயர்ப்புகள் "தேவனுடைய பிள்ளைகள்" என வழங்குகின்றன. கலாத்தியர் 3:26 சொல்லுகிறது, "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே". ஆணோ அல்லது பெண்ணோ விசுவாசத்தினாலே

"தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள்." மற்றும், உண்மையில், சில வசனங்கள் தேவனுடைய தத்தெடுக்கப்பட்ட குமாரர்களும் குமாரத்திகளும் என்றும் குறிப்பிடுகின்றன. "நான் அவர்களுக்கு என் ஆலயத்திலும், என் மதில்களுக்குள்ளும் குமாரருக்கும் குமாரத்திகளுக்குமுரிய இடத்தையும் கீர்த்தியையும் பார்க்கிலும், உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன், என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன்'' (ஏசாயா 56:5).

> "நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக… மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்" (கலாத்தியர் 4:4, 6,7; ஏசாயா 56:5; பிலிப்பியர் 2:15-யும் பார்க்கவும்).

ஆதியாகமம் 6-ன் "தேவபுத்திரர்'' என்பது நீதியுள்ள தேவனுடைய பிள்ளைகளையே குறிக்கிறது என்பது இந்த வசனங்களிலிருந்தும்

மற்ற வசனங்களிலிலிருந்து கிடைக்கும் தப்பிக்க முடியாத தீர்மானமாயிருக்கிறது.

## மனுஷகுமாரத்திகள்

ஆதியாகமம் 6-ல் உபயோகப்படுத்தப்படும் "மனுஷகுமாரத்திகள்" என்கின்ற பதம் மனிதனின் துன்மார்க்கமான பிள்ளைகளை அல்லது தேவனுடைய நாமத்தைத் தேடாத மனுஷ ஜீவிகளைக் குறிக்கிறது என்று பொருள்படுகிறது. வேதாகம பகுதிகளின் சூழ்நிலையைக் கவனிக்கும்போது "மனுஷகுமாரத்திகள்" காயீன் மற்றும் அவனுடைய மனைவிக்கு பிறந்தவர்களை குறிக்கிறது.

மேற்கொண்டு போவதற்குமுன்பு, சந்தேகவாதிகள் வேதாகமம் பற்றி எழுப்பும் பெரும் பிரசித்திப்பெற்ற கேள்விகளில் ஒன்றான, "காயீனின் மனைவி எங்கிருந்து வந்தாள்?" என்ற கேள்விக்கு நான் பதில் அளிக்க விரும்புகிறேன். பதிலை பெறுவதற்கு இன்னமும் அதிகமாக நீங்கள் படிக்கவேண்டும் என்பதற்கு இது வேறொரு எடுத்துக்காட்டு. ஆதாமும் ஏவாளும் நிறைய குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றனர் என்று ஆதியாகமம் 5:4 கூறுகிறது. ஆதாமை போல நீங்கள் 930 வருடம் வாழ்ந்து இருந்தால், மற்றும் நீங்கள் ஆரோக்கியமாகவும், வளமாகவும் மற்றும் இனப்பெருக்கம் செய்ய தகுதியுள்ளவர்களாயும் உங்கள் வாழ்க்கையில்

20 சதவீதம் மட்டும் இருந்து இருப்பீர்கள் என்றால், நீங்கள் இன்னமும் பல குழந்தை சுமக்கும் வருடங்களை பெற்றிருப்பீர்கள். பலுகிப் பெருகுங்கள் என்ற தேவனின் கட்டளையுடன் சந்தேகத்துக்கு இடமில்லாமல் ஆதாம் ஏவாளின் வம்சாவளி எண்ணிக்கையில் அதிகமாகவே இருந்தது.

முதல் தலைமுறைகளால் அனுப்பவிக்கப்பட்ட ஏறக்குறைய முழு உயிர்சக்தி மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றை கருத்தில் கொள்ளும் போது... அவர்கள் அனேகமாக திரளான குழந்தைகளை பெற்று இருந்தார்கள். அதனால் சந்தேகத்துக்கு இடமில்லாமல் அனேக சகோதரிகளில் ஒருத்தியைத்தான் காயின் மனைவியாக எடுத்திருக்க வேண்டும். மனிதனின் உயிர்சக்தி அதனுடைய உச்சத்தில் இருந்தபோது, வேதாகம சரித்திரத்தில் இந்த வேளையில் அவர்களை இந்த பழக்கத்தில் இருந்து ஒன்றும் விலக்கி வைக்கவில்லை. ஆபிரகாம் அவனுடைய ஒன்றுவிட்ட உடன் பிறந்த சகோதரியை விவாகம் முடிந்திருந்தார் (ஆதியாகமம் 20:2). ஈசாக்கு அவனுடைய உறவினரை மணம் முடித்திருந்தான். மோசேயின் காலம் வரைக்கும் சகோதரியை விவாகம் செய்வது விலக்கப்படவில்லை, ஒருவேளை, மரபணு பலவீனத்தின் அதிக ஆபத்து காரணத்தினாலும் குழந்தைகளுக்கு ஏற்படும் ஆரோக்கிய

சிக்கல்களாலும் அது மாற்றப்பட்டது. (உபாகமம் 27:22).

முதலில், ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இரண்டு குமாரர்கள் இருந்தார்கள், காயின் மற்றும் ஆபேல். காயின் ஆபேலை கொன்று போட்டான், அதனால் தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் சேத் என்கின்ற இன்னொரு மகனை கொடுத்தார். அவன் தனக்கு சொந்தமான பிள்ளைகளைப் பெற ஆரம்பித்தான், மற்றும் அவர்கள், “கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்” (ஆதியாகமம் 4:25,26). பிறகு வேதாகமத்தில் நாம் பார்த்து இருக்கிறதுபோல, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுபவர்கள் தேவனுடைய புத்திரர் என அழைக்கப்பட்டனர். “அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்” (யோவான் 1:12). “அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனே அவன் இரட்சிக்கப்படுவான்” (அப்போஸ்தலர் 2:21).

இப்பொழுது அவன் தன்னுடைய சகோதரனை கொலை செய்தபிறகு, காயின் தேவனுடைய பிரசன்னத்தில் இருந்து துரத்தப்பட்டான். “அவன் ஏதேனுக்குக் கிழக்கான

நோத் என்னும் தேசத்தில் குடியிருந்தான். காயீன் தன் மனைவியை அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி, ஏனோக்கைப் பெற்றாள்; அப்பொழுது அவன் ஒரு பட்டணத்தைக் கட்டி, அந்தப் பட்டணத்துக்குத் தன் குமாரனாகிய ஏனோக்குடைய பேரை இட்டான்" (ஆதியாகமம் 4:16,17).

இங்கே ஜலப்பிரளயத்துக்கு முன்பாக, காயினின் சந்ததியார் பட்டணங்களில் வாழ்ந்ததையும் சேத்துவின் சந்ததியார் நாட்டுப்புறத்தில் வாழ்ந்ததையும் பார்க்கிறோம். அவர்கள் தனித்தனியாக வாழ்ந்தவரைக்கும், தேவனுடைய புத்திரர் அவர்களுடைய நம்பிக்கைகளிலும் பழக்க வழக்கங்களிலும் உத்தமமாய் இருந்தார்கள்.

இருந்தாலும், காலப்போக்கில் அவர்கள் ஒன்றுக்கொன்று கலக்கத்துவங்கினர். மனுஷகுமாரத்திகள் வாழ்ந்திருந்த பட்டணங்களில் சுலபமாக பெறக்கூடிய அவர்களுக்கு வேண்டிய பொருட்களை பெற்றுக்கொள்ள தேவபுத்திரர் அங்கு சென்றிருக்கக்கூடும். தேவபுத்திரரும் மனுஷகுமாரத்திகளை ஒருவருக்கொருவர் பரிச்சயமாகி நண்பர்களாகவும்கூட மாறினர். எது எப்படி இருந்தாலும், சீக்கிரத்தில் சேத்துவின் தெய்வீக புத்திரர் அல்லது தேவபுத்திரர், காயினின் அழகான குமாரத்திகளால் கவரப்பட்டனர் அதனால் காயின் சந்ததியான

இந்த “மனுஷகுமாரத்திகளை” மணக்க ஆரம்பித்தனர்.

வேறு வார்த்தைகளில், அவர்களுடைய தார்மீகக் தன்மையையும் கருதாமல் சரீரப் பிரகாரமான இச்சைகளுக்கு பிடித்த பெண்களை தேவனுடைய புத்திரர் தங்கள் விருப்பம்போல மனைவிகளை தெரிந்து கொண்டனர். அவர்கள் நல்ல ஆலோசனைகளை புறக்கணித்தனர் மற்றும் ஒருவேளை அவர்களுடைய பெற்றோரின் சம்மதத்தை பெறவில்லை, அது மட்டுமல்லாமல் அவர்கள் தேவனிடம் கலந்தாலோசிக்கவில்லை மற்றும் இந்த விஷயத்தில் அவருடைய சித்தத்தை கருத்தில் கொள்ளவும் இல்லை.

## கலப்புத் திருமணங்கள்

நல்ல நோக்கத்தோடு தேவபுத்திரர் இப்படிப்பட்ட சூழ்நிலையில் சென்று இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஒருவேளை அவர்களுடைய கர்த்தராகிய தேவனை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி காயினின் குமாரத்திகளை மனமாற்றம் செய்ய அவர்கள் எண்ணி இருந்திருக்கலாம். காயீனின் குமாரத்திகளும் தாங்கள் இறுதியில் கர்த்தரை பின்பற்றுவோம் என்கின்ற வாக்குறுதியுடன் தேவனுடைய புத்திரரை கவர்ந்திழுத்திருந்திருக்கலாம்.

எப்படியும், தேவனுடைய ஆலோசனை அவர்களுக்கு இதைக்காட்டிலும் தெளிவாக இருக்க முடியாது:

> "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" (2 கொரிந்தியர் 6:14-18).

அவர்கள் அழகான முகத்தையோ, மிகச்சிறந்த தன்மையையோ, அல்லது ஆவிக்குரிய விஷயத்தில் ஒரு உணர்ச்சிமிக்க நம்பிக்கையோ பெற்றிருந்தாலும் மனமாற்றம் அடையாத அல்லது விசுவாசிக்காதவர்களை அவருடைய பிள்ளைகள் மணம் முடிப்பதை தேவன் விரும்பவில்லை. அதில் எந்த வித்தியாசமும் இல்லை; உறவுகளில் பிரச்சனைகள் வரும் என்று தேவன் சொல்லுகிறார்.

அவர் கிருபை உள்ளவராய் இருக்கிறதால் தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. சிலவேளைகளில் நம்முடைய எதிர்ப்பிலும் தவறான முடிவுகளின் மத்தியிலும் அவர் நம்மை ஆசீர்வதிக்கிறார். விசுவாசிகள் அவிசுவாசிகளை விவாகம் முடிக்கும் சூழ்நிலைகள் உருவாகின்றன இறுதியாக அவ்விசுவாசிகள் மனம்திரும்பி விடுகிறார்கள். இன்னமும் மணம்முடிப்பது தவறானதாகவே இருந்தது. தேவனுடைய வார்த்தைகள் தவிர்க்க முடியாதவை: அந்நிய நுகத்திலே பிணைபடாதிருங்கள். ஆனால் மனம் திரும்புவதினாலும் ஒப்புக்கொடுப்பதினாலும், தேவன் மன்னிக்கிறார். அது உண்மையாக இல்லை என்றால், நம்மில் அனேகருக்கு நம்பிக்கையே இருக்காது. தேவன் சிலவேளைகளில் நம்முடைய தவறான தெரிந்தெடுத்தல்களின் பின்விளைவுகளை

தனிக்கிறார், ஆனால் தெரிந்துகொண்டே அவருடைய ஆலோசனையை புறக்கணிப்பது விவேகமற்றது. மனிதனின் இருதயத்து நினைவுகளின் தோற்றம் எல்லாம் நித்தமும் பொல்லாததாக இருக்கும்போது உலகத்தில் இருக்கும் பெரிய தூன்மார்க்கத்துக்கு இழுத்துச்செல்லும் பிரச்சனையின் ஒரு அங்கமாக நீங்கள் மாறுகிறீர்கள்.

அதனால் இந்தக் கலப்பு திருமணங்களின் முடிவுகள் இராட்சதர் மட்டுமல்ல, ஆனால் துக்கமுமே. தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை கவருவதற்கு பதிலாக, மனுஷகுமாரத்திகள் தேவகுமாரர்களை கவர்ந்தார்கள்.

> “அவர்களோடே சம்பந்தம் கலவாயாக; உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக. என்னைப் பின்பற்றாமல், அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவர்கள் உன் குமாரரை விலகப்பண்ணுவார்கள்; அப்பொழுது கர்த்தருடைய கோபம் உங்கள் மேல் மூண்டு, உங்களை சீக்கிரத்தில் அழிக்கும்” (உபாகமம் 7:3,4).

தேவனுடைய குமாரர்கள் மனுஷ குமாரத்திகளோடு சம்பந்தம் கலந்து அதன் பலனால் நேரிட்ட அழிவுகள் பற்றிய

கதைகளால் வேதாகமம் நிறைந்திருக்கிறது. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட சிம்சோன் பெலிஸ்திய பெண்களால் தடுமாறினான். அவனுடைய பெற்றோர் அந்நிய மணமகளை திருமணம் முடிப்பதை தவிர்க்க அவனிடம் கெஞ்சினார்கள், ஆனால் அவன் விரும்பியதையே பெற்றுக்கொள்ள வலியுறுத்தினான். "அப்பொழுது அவன் தாயும் அவன் தகப்பனும் அவனை நோக்கி: நீ போய், விருத்தசேதனமில்லாத பெலிஸ்தரிடத்தில் ஒரு பெண்ணைக் கொள்ளவேண்டியதென்ன? உன் சகோதரரின் குமாரத்திகளிலும், எங்கள் ஜனமனைத்திலும் பெண் இல்லையா என்றார்கள். சிம்சோன் தன் தகப்பனை நோக்கி: அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளையே எனக்குக் கொள்ளவேண்டும் என்றான்" (நியாயாதிபதிகள் 14:3).

இதுபோல, சாலமோன் ராஜா புறஜாதி தேசங்களிலிருந்து அவர்கள் குமாரத்திகளை விவாகம் செய்து அவனுடைய அபரிதமான ஞானத்தினால் அவர்களை மனமாற வைக்கலாம் என்று சந்தேகத்துக்கு இடமில்லாமல் நம்பினான். ஆனால் அந்த புறஜாதி குமாரத்திகள் சாலமோனின் இருதயத்தை மாற்றிப்போட்டார்கள். இதனால்தான் தேவன் அவருடைய பிள்ளைகள் அவிசுவாசிகளை விவாகம் செய்யக்கூடாது என்று பிடிவாதமாக இருக்கிறார். விசுவாசி கொஞ்சம் கொஞ்சமாக அவிசுவாசியால்

மாற்றப்படுகிறார் என்பதே பெரும்பாலான நிகழ்வாய் இருக்கிறது, மாறான வழி அல்ல.

இந்த கடைசி காலத்தில் இதுபோலவே இயேசு நமக்கு ஒரு எச்சரிக்கை வைத்திருக்கிறார்:

> “நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும், எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண்கொண்டும் பெண் கொடுத்தும்” (மத்தேயு 24:37,38).

உலகலாவிய துன்மார்க்கம் ஜலப்பிரளயத்துக்கு வழிநடத்திய ஆதியாகமம் 6-ன் கலப்பு திருமணங்களை ஒருவேளை இயேசு இங்கே குறிப்பிடுகிறார்.

ஜலப்பிரளயத்துக்கு முன்பாக, நோவாவின் காலம்போல, ஜலத்தினால் இந்த உலகமும் அழிக்கப்பட்டு வழிநடத்திய அதே காரணிகள் மறுபடியும் நடைபெற வழிவகுக்கப்போகிறது. இயேசு மறுபடியும் வரும்போது இந்த உலகம் அக்கினி வெள்ளத்தால் அழிக்கப்படும் முன்பதாக என்ன நடைபெற போகிறதோ அதுவே ஒரு முன்னோட்டமாக ஜலப்பிரளயத்திதுக்கு முன்னான நிகழ்ச்சிகள் அமைகின்றன. வரலாறு மீண்டும் திரும்பப்போகிறது, ஆனால் நாம்

திரும்ப குற்றம் செய்பவர்களின் மத்தியில் இருக்கவேண்டிய அவசியமில்லை.

## பலதார மணம்

தேவகுமாரருக்கும் மனுஷகுமாரத்திகளுக்கும் இடையே நடைபெற்ற கலப்பு திருமணங்கள் கீழ்ப்படியாமையினால் மட்டும் வந்ததல்ல. ஆதியாகமம் 6:2ல் நாம் வாசிக்கிறோம், "அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்." இங்கும் பலதாரமணம் ஆரம்பித்தது.

"லாமேக்கு இரண்டு ஸ்திரீகளை விவாகம்பண்ணினான்; ஒருத்திக்கு ஆதாள் என்று பேர், மற்றொருத்திக்குச் சில்லாள் என்று பேர்" (ஆதியாகமம் 4:19). லாமேக்கு காயினின் இரண்டு குமாரர்களில் ஒருவன் மற்றும் அவன் இரண்டு மனைவிகளை மணந்தான். அதனால் தேவனுடைய சித்தத்திக்கு எதிராக அவனுடைய விசுவாசத்திற்கும் மாறாக மணந்து கொண்டது மட்டுமல்ல, அது ஒருவரைகாட்டிலும் அதிகமாக விவாகம் முடிப்பதாகும். ஆரம்ப நாட்களிலேயே விவாகத்தின் புனிதத்தன்மை இழக்கப்பட்டது.

இன்று நம்முடைய உலகத்தில் நடப்பதுபோலவே அது காணப்படுகிறது. அது இன்னும் மோசமாகியது!

உதாரணத்துக்கு, 'சகோதரி மனைவிகள்' (Sister Wives) என்றழைக்கப்படும் ஒரு

பிரபல அமெரிக்க நிஜ தொலைக்காட்சி நிகழ்ச்சி உட்டா லெஹி (Utah, Lehi) என்கிற இடத்தில் வாழும் ஒரு பலதார மணம் முடித்த குடும்பத்தின் வாழ்க்கையை சித்தரித்து அந்த குடும்பத்தில் கோடி பிரவுன் (Kody Brown) என்கிற நபர், அவருடைய நான்கு மனைவிகள் மற்றும் 16 பிள்ளைகளை உள்ளடக்கியது. முதல் மற்றும் பதினான்காம் திருத்தங்களின் அடிப்படையில் அவைகள் அவர்களுடைய உரிமையை பறிப்பதாக கூறி அவன் குடும்பம் உட்டா மாகாணத்தின் மீது அதனுடைய பலதார மணத்திற்கு எதிரான சட்டத்தினால் வழக்கு தொடர்ந்தனர். மொத்த தேசமும் இதனை கவனித்துக்கொண்டு இருந்தது, ஏனென்றால் ஒரே பாலினத்தில் பால் காதல் கொண்டவர்களுக்கு உபயோகப்படுத்தப்பட்ட அதே விவாதங்கள் முன்வைக்கப்பட்டன; அந்த ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால், ஒரு நபர் தான் இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு பேரோடு காதல் கொள்வதாக உரிமை கோரலாம்.

தேவனுடைய குமாரர்கள் அவர்களுடைய விவாக உறுதிமொழிகளை நிராகரித்தபோது, அவர்களுடைய விசுவாசத்தின் விசேஷதன்மை, ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசத்தின் முக்கியத்துவம் - ஒரு தாய், ஒரு தகப்பன் என்கிற தேவன் கொடுத்த குடும்பத்தின் வடிவமைப்பு - தேசத்தை

வன்முறை ஆக்கிரமித்தது மற்றும் மனிதனுடைய இருதயத்தின் நினைவுகளின் தோற்றம் எல்லாம் நித்தமும் பொல்லாததாக மாறியது. "மனுஷ குமாரனின் வருகை'' நிகழ்வதற்கு சற்று முன்பாக கடைசி காலத்தில் இவைகள் மறுபடியும் நிகழும் என்று இயேசு சொல்கிறார்.

அந்த நேரம் வெகுவாக வந்துவிட்டது. தொலைக்காட்சியை திறந்து எந்த அலைகளையும் புரட்டிப்பாருங்கள்; ஒழுக்கமின்மை, விபரீதம், விவாகரத்து, ஏமாற்றுதல் மற்றும் எக்கச்சக்கமான வன்முறை ஆகியவற்றைதான் நீங்கள் பார்ப்பீர்கள். திருமணத்தின் புனிதத்தன்மை தொடர்ந்து கேலி செய்யப்படும்போது அனேகமான நிகழ்ச்சிகளாகிய கொல்லுவது மற்றும் கொலையை சுற்றியே அமைந்திருக்கின்றன.

ஆனால் தேவன் சொல்லுகிறார், "என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப்போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம்'' (ஆதியாகமம் 6:3). தேவன் எதிர்காலத்தை உற்று நோக்கினார் மற்றும் இந்த எல்லா துன்பமும் மனிதனை எங்கு வழி நடத்துகிறது என்பதை பார்த்தார், அதனால் அது முடிக்கப்பட வேண்டும் என தீர்மானித்தார். கிறிஸ்து பின்னான காலத்தில் சொன்னார், "அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை, தெரிந்து

கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்" (மத்தேயு 24:22).

கடைசி காலத்தில், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் நிமித்தமாக தேவன் அதனை மறுபடியும் செய்வார். 120 வருடங்களாக, நோவா மற்றும் அவருடைய குடும்பத்தின் பிரசங்கம் மற்றும் எடுத்துக்காட்டு மூலமாக தேவனின் பரிசுத்த ஆவியானவர் பாவத்தினால் சிறைப்பட்டுப்போன சந்ததியுடன் பாடுபட்டார். அவர்கள் கவனிக்க மறுத்தனர். நோவாவும் அவருடைய குடும்பமும் பேழைக்குள் சென்றபின் கதவு அடைக்கப்பட்டபோது, தேவனை இன்னும் நம்பின 8 பேர் மட்டும்தான் அங்கு இருந்தார்கள். மற்றவர்களுக்கு தவணையின் காலம் முடிந்தது. இன்னும் ஏழு நாட்களாக காயின் மற்றும் சேத்தின் ஒன்றிணைந்த இனம் பேழைக்கு வெளியே வாழ்க்கையை தொடர்ந்தது, அவர்களுடைய சந்ததியார் அவர்களுடைய தூய்மையை பலிகொடுத்துவிட்டு தங்களை தீமைக்கு ஒப்புக்கொடுத்தனர். நீங்கள் இன்று தூய்மையாய் இருக்கிறீர்களா? தேவன் உங்களுக்கு சொல்கிறார், "என் ஆவி என்றைக்கும் போராடுவதில்லை." நீங்கள் கேட்பீர்களா?

## ஒரு இராட்சத பிரச்சனை

தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை விவாகம் செய்ததால் அவர்களுக்குப் பிறந்த "இராட்சதர்'' பற்றி நான் சொல்ல மறந்து விட்டேன் என நீங்கள் நினைக்கலாம். தேவகுமாரர் வெறுமனே சேத்தின் நீதிக்குரிய பிள்ளைகள் என்றால் மற்றும் மனுஷகுமாரத்திகள் காயீனின் சந்ததியின் குமாரத்திகள் என்றால், இந்த இணைப்பின் பிள்ளைகள் மட்டும் ஏன் இராட்சதர்களாயும் பராக்கிரமசாலிகளாயும் இருந்தார்கள்? இந்த துரதிருஷ்டவசமான ஆனால் மனித விவாகங்களின் சந்ததிப்பற்றி நாம் எப்படி விளக்குகிறோம்?

இது "மரபணு உயர் சக்தி'' என்று சொல்லப்படும் சாதாரண மறபணு சட்டத்தின் விளையாட்டு என்று நான் நம்புகிறேன்.

முதலாவது, இராட்சதர் எப்பொழுதும் இருந்தார்கள்.

உதாரணத்துக்கு, 1918ல் ஆல்ட்டன், இலினாயிஸ்-ல் (Alton, Illinois) பிறந்த ராபர்ட் வாட்லோவை (Robert Wadlow) எடுத்துக் கொள்ளுங்கள். பிறந்தபோது ஒரு சாதாரண 8 பவுண்டுகள் 6 அவுன்ஸ் எடை இருந்தார். ஆறு மாதங்களுக்கு பிறகு அவனுடைய எடை 30 பவுண்டுகள். ஒரு வருடத்திற்கு பிறகு, 18 மாதங்களில் அவனுடைய எடை 62 பவுண்டுகளாக இருந்தது. அவன் பருமனாக இல்லை, அவன் உயரமாக இருந்தான். அவன்

அதிர்ச்சி ஊட்டும் விதத்தில் தொடர்ந்து வளர்ந்து அவன் எட்டு வயது ஆனபோது 6 அடி 2 அங்குலம் வளர்ந்து, 195 பவுண்டுகள் எடை பெற்றிருந்தான். அவன் 13 வயதாகும்போது உலகத்தின் உயரமான சிறுவன் சாரணராக (Boy Scout) இருந்தான். 13 வயதில் அவன் 7 அடி 4 அங்குலம் உயரமாக இருந்தான். இறுதியில் 9 அடி உயரத்தை அடைந்தான்! (ஒப்பிடுகையில், கோலியாத் ஏறக்குறைய 9 அடி 6 அங்குலம் உயரமாக இருந்தான்). நவீன சரித்திரத்தில் உண்மையில் உயரமான நபராக ராபர்ட்டை தகுதி படுத்தியது.

ஆனால் இந்தப் பெரியஅளவு புகழ் அவனுக்கு எப்பொழுதும் சுலபமாக இருக்கவில்லை. அவனுடைய உடைக்கு சாதாரண அளவுக்கும் மூன்று பங்கு பெரிதான அளவு தேவைப்பட்டது மற்றும் அவருடைய காலணி அளவு 37, ஒரு ஜோடிக்கு ஆயிரக் கணக்கான டாலர்கள் தேவைபட்டது - மற்றும் அது பண கஷ்டத்தின் காலமாயிருந்தது. ராபர்ட் 20 வயதானபோது, சர்வதேச காலனி நிறுவனம் அவனுக்கு காலணிகளை இலவசமாக வழங்கி அந்த நிறுவனத்தை விளம்பரப்படுத்த அவனை கூலிக்கு பொருத்தியது. அவனுடைய வருமானத்துக்கு அதை மட்டுமே செய்தான். அவனுடைய நல்லெண்ண சுற்றுலாவாக 41 மாகாணங்களில் 800 நகரங்களைச் சுற்றிப்பார்த்து 3,00,000 மயில்கள் பயணித்தான்.

அவன் உள்ளே செல்வதற்கு வசதியாக முன்பக்கம் இருக்கையை எடுத்துவிட்டு பின்பக்கத்தில் உட்கார்ந்து அவனுடைய நீளமான கால்களை நீட்டி மடக்க ஒரு ஊர்தியை காலனி நிறுவனம் மாற்றி அமைக்க வேண்டியதாயிருந்தது.

அவன் அளவில் மிகப்பெரியவனாக இருந்தாலும், அவன் நல்ல இயல்பு உடையவனாகவும், புத்திசாலியாகவும், மென்மையானவனாகவும் இருந்தான். மக்கள் எப்பொழுதும் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். அவர்கள் அவனிடம் கேட்பார்கள், "ஒவ்வொருவரும் உன்னை விறைத்துப் பார்க்கும்போது அது உனக்கு கஷ்டமாக இருக்கிறதா?". அதை நான் பொருட்படுத்தவில்லை என்று பதிலளிப்பான். தபால் தலை சேகரிப்பு மற்றும் புகைப்படம் எடுப்பதில் சந்தோஷப்பட்டு அவன் தன்னுடைய ஒரு சாதாரண வாழ்க்கையை வாழ முயற்சித்தான். அவனை புகைப்படம் எடுத்த அவர்களுடைய புகைப்படங்களை இவனும் எடுப்பான்.

ராபர்ட் ஒரு நவீன நாளின் இராட்சதனாய் இருந்தான். விழுந்துபோன தூதர்களோ அல்லது வேற்றுகிரகவாசிகளோ அவனை உருவாக்க தேவை இல்லாதிருந்தது அல்லது அவருடைய வாழ்க்கை வழிபற்றி விளக்க தேவை இல்லாதிருந்தது. தேவகுமாரர் மற்றும்

மனுஷகுமாரத்திகளின் சந்ததியார் மரபணு உயிர்சக்தியிலிருந்து வந்திருக்கக்கூடும். ஒரு குழுவை சேர்ந்த மக்கள் வருடக்கணக்கில் தனிமைப்படுத்தப்படும்போது அவர்கள் ஒருவருக்கொருவர், சில பசுபிக் தீவினர் செய்ததுபோல கலப்பு மணம் செய்யும்போதும் மரபணு கூட்டம் கட்டுப்படுத்தும்போதும் பிறப்பு குறைபாடுகளுக்கும் மரபணு அசாதாரணகளுக்கும் அதிகமாக வழிவகுக்கிறது. இப்படிப்பட்ட தனிமைப்படுத்தப்படும் பல சந்ததிகளுக்கு பிறகு, அவர்கள் இறுதியாக அவர்களுடைய தீவை தாண்டி அல்லது குலத்தைத் தாண்டி திருமணம் முடிக்கும்போதும், அந்த சேர்க்கைகளின் பிள்ளைகள் அதிக ஆரோக்கியமாகவும், வலுவாகவும் மற்றும் ஆம் இன்னமும் பெரியதாகவும் இருக்க வாய்ப்பிருக்கிறது. உலகத்தின் மிகப்பெரிய பூனைகள் அரிப்புலிகளாக இருக்கின்றன, இவை புலிகள் மற்றும் சிங்கங்களின் கலப்பினங்கள்.

## தத்தெடுப்பின் தெரிவுகள்

தான் தேவனுடைய குமாரன் அல்லது குமாரத்தி என்று நினைக்கின்ற ஒவ்வொருவரும் உண்மையில் அப்படி இல்லை.

அந்நாட்களில் மத தலைவர்களான பரிசேயர் தங்களை ஆபிரகாமின் சந்ததி என்று இயேசுவிடம் பெருமை அடித்துக்

கொண்டனர். இயேசு அவர்களைப் திருத்தினார். “நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே” (யோவான் 8:39). நீங்கள் முதன் முதல் இதனை வாசிக்கும்போது இயேசு இந்த வார்த்தைகளை சொல்லுவதற்கு எவ்வளவு அவதூராக இருந்திருக்கும் எனும் சரியான உணர்வை நீங்கள் பெறாமல் இருக்கலாம். ஆனால் அது பரிசேயர்களை பொதுவில் சங்கடப்படுத்தியதால் அவர்கள் அவருடைய மரணத்தை ஆர்வத்துடன் தேட ஆரம்பித்தனர். ஆனால் இயேசு அங்கே நிறுத்தவில்லை... .

> “இயேசு அவர்களை நோக்கி, தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள், ஏனெனில் நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன்; நான் சுயமாய் வரவில்லை, அவரே என்னை அனுப்பினார். என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா? நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்;” (யோவான் 8:42-44).

நம்முடைய உண்மையான பாரம்பரியத்தை சோதிக்க இது ஒரு எளிமையான கொள்கை. நம்முடைய செயல்பாடுகளில் எந்த “பிதாவை”

நாம் பின் தொடர்கிறோம்? பரிசேயர்கள் சபையில் தலைவர்களாயிருந்தார்கள், இருந்தும் அது அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவில்லை, ஒரு தேவாலயத்தில் அங்கத்தினராயிருப்பதாலோ அல்லது யூதராயிருப்பதாலோ அவர்களை தேவனுடைய பிள்ளைகளாக ஆக்கவில்லை. இன்று, சபை புத்தகங்களில் உங்கள் பெயர் இருப்பதாலோ உங்களை தேவனுடைய குமாரனாகவோ அல்லது குமாரத்தியாகவோ ஆகப் போவதில்லை, மாறாக நாம் யாருக்கு கீழ்படிகிறோமோ அவருடைய பிள்ளைகளாக நாம் இருக்கிறோம். யாருடைய விருப்பங்களை நாம் செய்கிறோமோ, நீதியின் பிதா அல்லது பாவத்தின் பிதா, அதுவே நம்முடைய பிதாவாக மாறுகிறது. (ரோமர் 6:16)

அது மிகவும் அபாயகரமானது. அதனால் நீங்கள் யாருடைய பிள்ளை? நீங்கள் தேவனுடைய பிள்ளையா?

நாம் மறுபடியும் பிறக்கும்போது நாம் தேவனுடைய குடும்பத்தில் தத்தெடுக்கப்படுகிறோம், நம்முடைய பரலோக பிதாவை நாம் பின்பற்ற விரும்புவோம். “அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்’’ (1 யோவான் 2:6).

நீங்கள் இப்பொழுது தேவனுடைய குமாரனாகவோ அல்லது குமாரத்தியாகவோ இல்லை என்றால், நீங்கள் ஒரு புதிய

குடும்பத்தை தெரிவு செய்து கொள்ளலாம் என்பது அற்புதமான செய்தி.

> "விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்" (எபிரேயர் 11:24-26).

தேவனால் அழைக்கப்பட்டபோது, மோசே எகிப்திய தத்துக்கு பதிலாக பரலோகத்தின் தத்திற்கு தெரிந்து கொண்டான். இயேசுவின் மூலமாக நீங்களும் செய்ய முடியும்.

> "நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரியினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். மேலும் நீங்கள்

புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய சுதந்திரனாயுமிருக்கிறாய்" (கலாத்தியர் 4:4-7).

ஜூன்10, 1991 அன்று ஒரு பேருந்து நிறுத்தத்தில் ஜெஸ்ஸி லீ டியுகாட் (Jaycee Lee Dugard) என்கின்ற 11 வயது சிறுமி பிலிப்பு காரிடோ மற்றும் அவனுடைய மனைவி நான்சியால் கடத்தப்பட்டாள். அவள் ஜனங்களின் பார்வைக்கு அப்பால் தனிமையாக்கப்பட்டு சத்தம் வெளியே செல்லமுடியாத ஒரு குடிலில் வைக்கப்பட்டாள். கொடூரமாக ஒரு அடிமையாக வைக்கப்பட்டு, காரிடோவால் 18 வருடங்களாக பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். கொஞ்ச காலத்துக்குப்பிறகு இந்த சூழ்நிலை அவளுக்கு பழக்கமாகி விட்டது. அது ஒரு சாதாரணமானதாய் இருந்தது. அவள் குடும்பத்தின் ஒரு அங்கம் என நம்பினாள், ஆனால் பிற்பாடு பிலிப்பும் நான்சியும் எப்படிப்பட்ட கொடுரமானவர்கள் என்பதை கண்டுபிடித்தாள். அதிர்ஷ்டவசமாக அவள் இறுதியில் கண்டுபிடிக்கப்பட்டு அந்த மோசமான

நிலையில் இருந்து விடுவிக்கப்பட்டாள் மற்றும் அவளுடைய உண்மையான குடும்பத்தில் மறுபடியும் இணைக்கப்பட்டாள். வாழ்க்கையின் ஒரு மொத்த மாற்றத்தை பற்றி பேசுங்கள்!

அதுபோலவே தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கவேண்டிய நிறைய மக்களை பிசாசு இந்த உலகத்தில் கடத்திவைத்து இருக்கிறான். அவன் அவர்களை எடுத்துக்கொண்டு துஷ்பிரயோகம் செய்திருக்கிறான் மற்றும் அவர்கள் அவர்களுடைய உண்மையான குடும்பத்தில் தான் இருக்கிறார்கள் என நினைக்கவைக்க கையாண்டிருக்கிறான். பிசாசின் பொய்கள் உண்மையெனவும் அவன் அவர்களுடைய நண்பன் எனவும் நம்பவைத்திருக்கிறான். பிலிப்பு காரிடோ ஜெஸ்ஸி மீது அதே உரிமை கோரினான். ஒருவேளை நீங்கள்கூட பிசாசுக்கு இப்படி பழக்கப்பட்டு விட்டிருக்கலாம், நீங்கள் அவனுடைய குடும்பத்தின் ஒரு அங்கத்தினர் என்று நினைக்கலாம். அவன் உங்களை சுற்றி இருப்பது உங்களுக்கு வசதியாக இருக்கிறது, ஆனால் அவன் ஒரு கடத்தல்காரன், ஒரு கொடுமைகாரன். நீங்கள் விழித்தெழ வேண்டும் மற்றும் நீங்கள் விடுவிக்கப்பட முடியும் என்று இயேசு சொல்வதை கேளுங்கள்.

பிலிப்பு காரிடோ 431 வருடங்கள் சிறையில் இருக்க தீர்ப்பு செய்யப்பட்டான். அவனுடைய மனைவி 36 வருடங்கள் சிறை இருப்புக்கு தீர்ப்பு செய்யப்பட்டாள். அரசாங்கத்திலிருந்து,

ஜெஸ்ஸி 20 மில்லியன் டாலர் நஷ்ட ஈடாக பெற்றுக்கொண்டாள், அத்தோடு ஒரு பெரிய புத்தக ஒப்பந்தமும் பெற்றாள். வாழ்க்கையின் எஞ்சிய பகுதியை அவள் சரியாக திட்டமிட்டால் அவள் ஒருவேளை நிதீ ரீதியாக நன்றாக இருக்கலாம். மோசமான ஏதோ ஒரு கொல்லைப்புறத்தில் ஒரு எளிய சிறு குடிசையில் வந்ததிலிருந்து என்ன ஒரு பெரிய செல்வத்தின் மாற்றம் - விடுதலை ஆக்கப்படுவது, உங்கள் உண்மையான குடும்பத்தை கண்டுபிடிப்பது, ஒரு தூய்மையான வாழ்க்கை வாழ்வது, வழக்கமான வாழ்க்கை வாழ்வது மற்றும் திடிரென ஏழ்மையிலிருந்து செல்வந்தனாக மாறுவது. என்ன ஒரு தீவிரமான மாற்றம்!

இதை தான் தேவன் நமக்கு செய்யவேண்டும் என விரும்புகிறார். இப்பொழுதே, ராஜாவின் பிள்ளையாக இருக்க நீங்கள் தெரிவு செய்யமுடியும், நித்திய வாழ்க்கையின் சுதந்திரவாளி ஆகலாம் மற்றும் அவர் நல் மகிழ்ச்சி அடையும் தேவனின் ஒரு குமாரனாகவோ அல்லது குமாரத்தியாகவோ நீங்கள் மாறலாம்! அவரிடத்தில் வெறுமனே கேளுங்கள்.

AMAZING FACTS

India

தேவனுடைய செய்தியே எங்களுடைய ஊழியம்



BOOKSTORE.AFTV.INற்கு வருகைத் தரவும்.

இங்கே நீங்கள் கிறிஸ்தவப் புத்தகங்கள், பத்திரிக்கைகள் மற்றும் புக்மார்க்குகள் என பல பயனுள்ள பொருட்களை வெவ்வேறு மொழிகளில் வாங்கலாம்.

உங்கள் வீட்டிற்கே டெலிவரி செய்யப்படும்!

AMAZING FACTS

India

# அமேசிங் ஃபேக்ட்ஸ் வேதாகமப் பாடங்கள் மூலம் உங்கள் தேடுதலைத் தொடருங்கள்!

மனதைக் கவரும், ஊக்கமூட்டும் இந்தத் தொடர் சத்தியங்கள் உங்கள் எதிர்காலத்தை தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் எதிர்கொள்ள உதவும்.

எங்களை தொடர்பு கொள்ள

**BibleStudy.AFTV.in**

என்ற இணையதளத்தில் இன்றே எங்களை சந்திக்கவும்.

இன்னும் அதிகமான **இலவச**

# டிஜிட்டல் பத்திரிக்கைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள்.




**AFTV.in/Free-Book-Library**

ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு என பல மொழிகளில் கிடைக்கிறது!

AMAZING FACTS
India

Post Box No. 51 • Banjara Hills,
Hyderabad, TS, 500034

www.AmazingFactsIndia.org